விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 049 வள்ளுவர் ஆண்டு 2056 தை 24 வியாழக்கிழமை (06.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அடக்குமுறைகளைக் கைவிட்டு அரசு ஜனநாயக முறையில் செயற்பட வேண்டும்

### பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அடக்குமுறைகளைக் கைவிட்டு அரசாங்கம் ஜனநாயக முறையில் செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பிக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

அரசாங்கம் கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தோல்வியை சந்தித்து வரும்போது அடக்குமுறைகளைக் கையாண்டு வரு ▷15

## பாராளுமன்றத்தில் அர்ச்சுனா - சபாநாயகர் இடையே கடும் முறுகல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பிக்கும் சபாநாயருக்கும் இடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டது.

பாராளுமன்ற அடையாள அட்டை தனக்கு 2 மாதங்களாக வழங்கப்படவில்லை என அர்ச்சுனா இராமநாதன் கடுமையாக சாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற நிர்வாகத் தினரின் பொறுப்பற்ற செயல் குறித்து ▷15


## ஐக்கிய அரபுக்கு ஜனாதிபதி அநுர விஜயம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டு உலக அரச உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர்வரும் 10ஆம் திகதி முதல் 13 ஆம் ▷02

# ஏப்ரல் 24ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்

### பாராளுமன்றில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி நடத்த முடியும் என சபைத் தலைவரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## பணம் செலுத்தி உணவருந்திய எம்.பிக்கள்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் தாம் உட்கொள்ளும் உணவுக்காக 2,000 ரூபாவினைச் செலுத்தும் தீர்மானம் நேற்று முதல் நடைமுறைப் ▷15

## 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

அரச சேவைக்குள் 35 ஆயிரம் பட்டதாரிகளை இணைக்கும் திட்டம் காணப்படுவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை ▷15

## வடக்கில் அவசரமாக முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பில்

### உலக வங்கிப் பிரதிநிதியிடம் ஆளுநர் கலந்துரையாடல்



(கொழும்பு)

வடக்கில் அவசரமாக முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சிரேஷ்ட ▷02

## நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நாமல் எம்.பிக்கு அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை எதிர்வரும் 18ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதற்காக இந்திய நிறுவனமான கிரிஷிடமிருந்து 70 மில்லியன் ரூபாயைப் பெற்று முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப் ▷02

## கடவுச்சீட்டு அலுவலகம் 24 மணி நேரமும் இயக்கத் தீர்மானம்

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் 24 மணிநேரமும் இயங்கி நாளொன்றுக்கு 4,000 கடவுச் சீட்டுக்களை வழங்கு ▷15

## எம்.பிக்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசாங்கம் வாகனங்களை இறக்குமதி செய்யாது என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பிலேயே அவர் நேற்றுப் புதன்கிழமை இதனை அறிவித்தார். ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றில்...

பட்ட குற்றப்பத்திரிகைகளைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்த அறிவிப்பை வெளியிட உத்தரவிட்டார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஊழல் எதிர்ப்புக் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் தற்போதைய அமைச்சருமான வசந்த சமரசிங்க செய்த புகாரைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் நடத்தப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிதி விசாரணைப் பிரிவு முன்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பணங்களைச் சமர்ப்பித்திருந்தது.

அந்த வழக்கில் நாமல் ராஜபக்ஷ ஒரு சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## ஏப்ரல்...

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் தொடர்பில் எதிர்வரும் 18 மற்றும் 19ஆம் திகதிகளில் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வியாக்கியானங்களை உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை என சபாநாயகர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கரைச்சி பிரதேச சபையின் பகிரங்க அறிவித்தல்

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி சேவைச் சந்தையில் அமைந்துள்ள குறித்த A-96 ஆம் இலக்க வர்த்தக நிலையமானது சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் 2ஆம் சரத்தை மீறி உப வாடகைக்கு வழங்கியமை உறுதிப்படுத்தப்பட்டமையால் இவ் வர்த்தக நிலையம் 2025.01.30 ஆம் திகதி மூடப்பட்டு பிரதேச சபையால் பொறுப்பேற்கப்பட்டது.


A-96 ஆம் இலக்க வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கையினை மேற்கொண்டவர் தமது பொருட்களின் உரிமையை உறுதிப்படுத்தி 2025.02.06 இன்றிலிருந்து 07 வேலை நாட்களுக்குள் கரைச்சி பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளலாம். தவறும் பட்சத்தில் இப்பொருட்களுக்கு கரைச்சி பிரதேசசபை எவ்வகையிலும் பொறுப்பேற்றுக் கொள்ளாது என்பதனை பகிரங்கமாக அறியத் தருகின்றேன்.

தகவல் :
செல்வராஜ் செல்வகுமார்,
செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

(C-2202)

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 - 08 - 1951



இறப்பு 05 - 02 - 2025

## சின்னத்தம்பி தர்மகுலசிங்கம்

அல்வாயைப் பிறப்பிடமாகவும் பாலாவித் தெரு பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்று (05.02.2025) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் பாலசிங்கம், பொன்னம்பலம், ராஜேஸ்வரி, துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுரேந்தன், சுரேக்கா (அமரர்), நரேந்தன், யயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகலா, சுதர்சினி, மோழிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அஸ்வின், திரிஷன், தனுராம், தேஜா, கிருசிகா, வேனுராம், ஹரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2025) பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 979 4872

(3339)

## ஜனாதிபதியின் நிதி நிவாரணத்தை பிரதேச சபை ஊடாக வழங்கத் தீர்மானம்

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளை விரிவுபடுத்து வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. சகல பிரதேச சபைகள் ஊடாக நிதியத்தின் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பதற்கும் பிரதேச சபைகள் ஊடாக குறித்த விண்ணப்பதாரிகளுக்கு நிவாரண நிதியத்தை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை(5) நடைபெற்ற அமர்வின் போது பிரதமருடனான கேள்வி நேரத்தின் போது ஆளுந்தரப்பின் உறுப்பினர் டி.கே. ஜயசுந்தர முன் வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பதிலளித்த தாவது, ஏழ்மை ஒழிப்பு, கல்வி, மத மேம்பாடு, நாட்டுக்கு சேவையாற்றிய தரப்பினருக்கு நிவாரணமளித்தல் மற்றும் நலன்புரி சேவைகளுக்காக ஜனாதிபதி நிதியம் உருவாக் கப்பட்டது.

1978ஆம் ஆண்டு 07ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் தலைவராக ஜனா திபதியும் நிர்வாக சபையின் உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஜனாதிபதி நிதியத்தின் சேவையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கமைய சகல பிரதேச சபைகள் ஊடாக நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள் வதற்கு நிகழ்நிலை முறைமை ஊடாக விண்ணப்பம் செய்வதற்கும் பிரதேச சபைகள் ஊடாக நிவாரண நிதியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்குப் புதிய கணினி கட்டமைப்பு உருவாக்கப்பட்டு அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நலனைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி நிதியம் உருவாக்கப்பட்டது. ஆனால் கடந்த கால அரசாங்கங்களில் ஜனாதிபதிகளின் நண்பர்கள் மற்றும் அவர்களுக்கு சார்பான அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே நிதி வழங்கப்பட்டது. நிதியம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது. இதனை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஜனாதிபதி நிதியத்தில் இருந்து முறையற்ற வகையில் நிதி பெற் றுக் கொண்டவர்கள் நாட்டுக்கு சேவையாற்றியவர்கள் என்ற அடிப்படையில் நிதி பெற்றுக்கொள்ள வில்லை.

ஆகவே இவ்விடயம் குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன என்றார். (ம-7)

## வடக்கில்...

பொருளியலாளர் அந்தோனி ஒபய சேகரவுடன் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை (05) இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்திலிருந்து போருக்கு முன்னர் பெருமளவு மரக்கறிகள் மற்றும் மீன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும் போரின் பின்னர் அவ்வாறான செயற்பாடுகள் முழுமையாக நடைபெறவில்லை என ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் போருக்கு முன்னர் சிமெந்து தொழிற்சாலை, அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை எனப் பல தொழிற்சாலைகள் இயங்கினாலும் போரின் பின்னர் அவை முழுவீச்சில் இயங்கவில்லை என்றும் இதனால் வடக்கில் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால்கள் தொடர்பில் உலக வங்கிப் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர். வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை மேம்பாட்டில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் உலக வங்கிப் பிரதிநிதிகள் அவதானம் செலுத்தினர்.

சுற்றுலாத்துறைசார் முதலீட்டுக்கு பலர் தயாராக உள்ளபோதும் வன வளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன வற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. கொழும்பிலிருந்து வடக்குக்கான பயண நேரம் நீண்டதாகக் காணப்படுகின்றமையால் சுற்றுலாத்துறைக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பிலும் உலக வங்கிப் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் அரச காணிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் காணப்படுவதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார். யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குடிநீர் மிகப் பிரதான பிரச்சினையாக இருப்பதாகவும் குறிப்பிட்ட ஆளுநர் 2018 2019 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் உலக வங்கியின் நிதியுதவியில் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவிருந்த மிகப்பெரிய திட்டங்கள் துரதிஷ்டவசமாக நடைமுறைப்படுத்தப்படாமல் போனமை தொடர்பிலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் அரசியல் நிலைமைகள், ஜனாதிபதியின் யாழ்ப் பாணத்துக்கான பயணம் தொடர்பிலும் உலக வங்கியினர் கேட்டறிந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உலக வங்கியின் ஆலோசகர்களுள் ஒருவரான கணேஸ் விக்னராஜா மற்றும் ஆராய்ச்சி ஆய்வாளர்களான உதகிருணி அத்தபத்து, நிரோஷா பெரேரா ஆகியோரும், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எந்திரி அ.எ.சு.ராஜேந்திரா ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-7)

## ஐக்கிய...

திகதி வரை ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொள்வதாக அந்த அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கான நிர்ணய விலையை அறிவித்தது அரசாங்கம்

(கொழும்பு)

**ஒரு கிலோ நெல்லுக்கு வழங்கப்படும் விலைகளை அரசாங்கம் நேற்று நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் அறிவித்துள்ளது.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அதற்கமைய, நாடு நெல் கிலோவொன்று 120 ரூபாவுக்கும், சம்பா நெல் கிலோவொன்று 125 ரூபாவுக்கும், கீரிச் சம்பா நெல் கிலோவொன்று 132 ரூபாவுக்கும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் என விவசாய அமைச்சர் கே.டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

மேலும், விவசாயிகளிடமிருந்து உலர்ந்த நெல்லை மட்டுமே அரசாங்கம் கொள்முதல் செய்யும் என்றும் விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதி செய்யும் அதே வேளையில், சந்தையில் அரிசியின் நிலைத் தன்மையைப் பேணுவதற்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# மகிந்தவை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று புதன்கிழமை காலை கொழும்பு விஜேராம வீதியில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகரகாரியவசமும் இணைந்து கொண்டார். (நி-8)

# நீர்க்கட்டணத்தைக் குறைக்கப் பரிசீலனை

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் நீர்க் கட்டணத்தை 10% முதல் 30% வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அண்மைய மின் கட்டணக் குறைப்புக்கு அமைவாக நீர்க் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் பரிசீலித்து வருவதாக அதன் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில், முன்மொழியப்பட்ட கட்டணக் குறைப்பை மதிப்பிடுவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதன் பரிந்துரைகள் அடுத்த சில நாட்களுக்குள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு தலைவருக்கு சமர்ப்பிக்கப்படும்.

அது தொடர்பான அறிக்கை கிடைத்தவுடன், அந்த விடயம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு அனுப்பப்படும்.

அதன் பின்னர் அந்த அறிக்கை அமைச்சரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-8)

### யாழ்.புகையிரத நிலைய

# ஆசன முன்பதிவுக் கருமபீடம் 24 மணி நேரமும் சேவையில்

## அத்தியட்சகர் தே.சுரேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தின் ஆசன முன்பதிவுக் கருமபீடம் நேற்று முன்தினம் முதல் 24 மணித்தியாலமும் இயங்குவதாக யாழ்ப்பாண புகையிரத நிலையத்தின் அத்தியட்சகர் தே.சுரேந்திரன் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அதிகாலை 5 மணிமுதல் இரவு 7 மணி வரை இயங்கிவந்த ஆசன முன்பதிவுக் கருமபீடம் பயணிகளின் நன்மை கருதி 24 மணிநேர சேவையாக மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர் இது பொதுமக்களின் வீண் அலைச்சலைக் குறைத்து அவர்களுக்கு நல்ல சேவையினை வழங்கும் முகமாக நடைமுறைப்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெற்றது. குறித்த கூட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்த வடக்கிற்கான புகையிரத சேவைகள் அனைத்தும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை வைத்திருந்மை குறிப்பிடத்தக்கது. (க-நி-8)

# கட்சித் தலைவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஏனைய அரசியல் கட்சியின் தலைவர்களுடன் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் மற்றும் பாராளுமன்ற விவகாரங்களை ஒருங்கிணைப்பது குறித்து நேற்று முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பாராளுமன்றத்தை பலப்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் நன்மை பயக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும், தீங்கான கொள்கைகளை எதிர்ப்பதற்கும் ஒன்றிணைந்த எதிரணியின் அவசியத்தை இந்த சந்திப்பின் போது சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கூட்டு நடவடிக்கையில் ஒருமித்த கருத்தை எட்டுவதே இக் கலந்துரையாடலின் முதன்மை நோக்கமாக அமைந்தது.

பாராளுமன்றக் குழுக்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்கேற்ப எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஒப்புக்கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஏனைய கட்சித் தலைவர்களுக்கும் இடையில் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி இடம்பெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதில் ஏனைய கட்சித் தலைவர்களான கயந்த கருணாதிலக, ஜே.சி.அலவத்துவல, அஜித் பி பெரேரா, ரிஷாத் பதியுதீன், நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, ஜீவன்தொண்டமான், சிவஞானம் ஸ்ரீதரன், பி.சத்தியலிங்கம், ஏ.காரியப்பர், வி.ராதாகிருஷ்ணன், அனுராதா ஜயரத்ன, டி.வி.சானகா மற்றும் காதர் மஸ்தான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி-8)


தைப்பூசம்

இனுவில் கந்தசுவாமி கோவில்

தைப்பூச மஞ்சத்திருவிழா



காலம் - 11.02.2025 செவ்வாய்க்கிழமை

பால்க்குடப்பவனி

ஆரம்பம் - காலை 6 மணி, இனுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்.

தைப்பூசத்தினத்தன்று யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெருந்தொகையான முருகனின் அடியவர்கள் இனுவில் கந்தனுக்கு பால்க்குடம் எடுத்து பாலாபிஷேகம் செய்வது வருடா வருடம் இடம்பெற்று வருகின்றது.

தொலைவிலிருந்து ஆலயத்திற்கு வந்து பால்க்குடம் எடுக்கும் அடியவர்களின் வசதி கருதி பால், குடம் என்பன ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஒரு பால்க்குடப் பற்றுச்சீட்டு - 400/=

பால்க்குடம் எடுக்க விரும்புபவர்கள் 10.02.2025 திங்கட்கிழமைக்கு முன்பு ஆலய கருமபீடத்தில் காலை 9-11 மணி முதல், மாலை 4.30 - 6.00 மணிவரை முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

காலை 9 மணிமுதல் பி.ப 2 மணிவரை பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

தைப்பூச பெருமஞ்ச கலை பண்பாட்டு மன்றம், இனுவில் கந்தசுவாமி கோவில், யாழ்ப்பாணம்.

(சி-2198)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள்-2025

## மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறும்!



**கிரகநிலை** - ராசியில் சனி - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - சுக ஸ்தானத்தில் குரு (வ) - பஞ்சம பூர்வ ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - அஷ்டம ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன் என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து புதன் ராசிக்கு மாறுகிறார். 11.02.2025 அன்று சுக ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து சூரியன் ராசிக்கு மாறுகிறார். 21.02.2025 அன்று பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02. 2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து புதன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் இளகிய மனம் படைத்தவர்கள். பொறுமையும் நிதானமும் உடையவர்கள். இந்த மாதம் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கலாம். உடல் ஆரோக்கியம் ஏற்படும். நண்பர்களால் லாபம் கிடைக்கக் கூடும். மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய நேரிடும். பணவரத்து கூடும். வீண் அலைச்சல் திடீர் கோபம் உண்டாகலாம். சுக ஸ்தானத்தில் இருக்கும் கிரக சேர்க்கை காரிய வெற்றி தரும். மதிப்பும், அந்தஸ்தும் உயரும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கடன் பிரச்சினைகள் தீரும். போட்டிகள் குறையும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விடயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும். வாக்கு வன்மையால் நன்மை ஏற்படும்.

குடும்பதிபதி குரு சஞ்சாரத்தால் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த இடைவெளி குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர்கள் வழியில் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். நண்பர்களால் தொந்தரவுகள் ஏற்படலாம். பெண்கள் மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம். காரிய வெற்றி, பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்.

கலைத்துறையினருக்கு இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். சக கலைஞர்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் நன் மதிப்பைப் பெறுவீர்கள். நேர்மையாகச் சிறப்பாக பணிகளை செய்து பாராட்டுக்கள் கிடைக்க பெறுவீர்கள். அரசியல் துறையினருக்கு உயர் பதவிகள் கிடைக்கக் கூடும்.

எல்லா வகையிலும் நன்மை ஏற்படும். தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக முடியும்.




பணவரத்து அதிகரிக்கும். தடைகள் நீங்கி முன்னேற்றம் காண்பீர்கள். மாணவர்கள் சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள். பாடங்களில் கவனம் செலுத்துவது அதிகரிக்கும்.

**அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். கணவன் மனை விக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் நலனுக்காகப் பாடுபடவேண்டி இருக்கும். உறவினர்களிடமும் பழகுவதில் கவனம் தேவை.

**சதயம்:** இந்த மாதம் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். எதிலும் முன்னேற்றம் காணப்படும். முழுக் கவனத்துடன் செய்யும் காரியம் வெற்றியாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுடன் முன்னேற்றம் காண்பீர்கள். மன அமைதி, குடும்பத்தில் சுபீட்சம் உண்டாகும்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கி<br>ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 – புத – கும்<br>11.02 – குரு – வநி<br>12.02 – சூர் – கும்<br>21.02 – செ – வநி<br>26.02 – புத - மீன | | |
| சூரி<br>புதன் | | | |
| | | | கேது |

**பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள்.

**பரிகாரம்:** ஆஞ்சநேயரை வியாழக் கிழமை வெண்ணை சாற்றி வழிபட மனோதைரியம் கூடும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 15, 16, 17

**அதிஷ்ட தினங்கள்:** 9, 10

## எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்!



**கிரகநிலை** - ராசியில் சுக்கிரன், ராகு - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு (வ) - சுக ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - களத்திர ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சூரியன், புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து புதன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று லாப ஸ்தானத்தில் இருந்து சூரியன் அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று சுக ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து புதன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் கற்பனை [illegible]மும் கலையார்வமும் மிக்கவர்கள். நட்பிற்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள். இந்த மாதம் விருப்பங்கள் கைகூடும். ராசிநாதன் சஞ்சாரத்தால் பயன் தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். காரியங்களில் நன்மை உண்டாகும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். தனாதிபதி செவ்வாய் சஞ்சாரம் மூலம் பணவரத்து குறையும். வாழ்க்கைத் துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை.

தனாதிபதி செவ்வாய் தொழில் ஸ்தானத்தைப் பார்க்கிறார். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும். வழக்கம்போல் வியாபாரம் இருந்தாலும் திடீர் பணத்தேவை ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையைச் செய்யும் முன்பும் அது பற்றி அதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம்.

குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும். உறவினர்கள் வகையில் செலவுகள் ஏற்படலாம். நண்பர்களால் இருந்து வந்த கருத்து வேற்றுமை அகலும். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். திடீர் பணத்தேவை உண்டாகலாம்.

கலைத்துறையினருக்கு எல்லாப் பிரச்சினைகளும் சுமூகமாக முடியும். வீண் முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தைக் குறைத்து விவேகமுடன் செயற்படுவது நன்மை தரும். பணவரத்து தாமதப்படும். பெரியோர்களிடம் பகைமை பாராட்டுவதைத் தவிர்ப்பது நல்லது. அரசியல் துறையினருக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் தாமதப்படும்.

பழைய பாக்கிகள் வசூலாவதில் மெத்தனம் காணப்படும். எந்த ஒரு வேலையையும் அலைந்து செய்து முடிக்க வேண்டி இருக்கும். எந்த ஒரு முடிவையும் எடுக்கும்போது ஒருமுறைக்கு




பலமுறை யோசிப்பது நல்லது. மற்றவர்களிடம் பகைமை பாராட்டுவதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு தொழிற் கல்வி கற்பதில் ஆர்வம் உண்டாகும். திட்டமிட்டுப் படிப்பது எதிர்காலத்திற்கு உதவும். திறமையுடன் காரியங்களைச் செய்வீர்கள்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:** இந்த மாதம் முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கி<br>ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி<br>05.02 – புத – கும்<br>11.02 – குரு – வநி<br>12.02 – சூர் – கும்<br>21.02 – செ – வநி<br>26.02 – புத - மீன | | |
| சூரி<br>புதன் | | | |
| | | | கேது |

**உத்திரட்டாதி:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சினைகள் நீங்கி அமைதி ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனகசப்பு மாறும். விருந்தினர்கள் வருகை இருக்கும். குடும்பச் செலவுகள் குறையும். பிள்ளைகள் உங்களது ஆலோசனைகளைக் கேட்பார்கள். அவர்களுக்குத் தேவையானவற்றைச் செய்து கொடுப்பீர்கள்.

**ரேவதி:** இந்த மாதம் நீங்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும். எதிர்ப்புகள் விலகும். பணவரத்து கூடும். குடும்பத்தினர் தொடர்பான கவலைகள் நீங்கும். அவர்களிடம் இருந்த கருத்து வேற்றுமை குறையும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். தாய்வழி சொத்துக்கள் சேரும்.

**பரிகாரம்:** சித்தர்களை வணங்கி வர மனக்கவலை நீங்கும். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19

**அதிஷ்ட தினங்கள்:** 11, 12 ;

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி
## உலர் உணவுகள் பெறுகைகள்-2025

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள் கீழ்வரும் வைத்தியசாலைகளுக்கான உலர் உணவுகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

2. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஆ. அத்துடன் மூல உணவுகளை வழங்குவதற்கான அனுமதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ.அத்துடன் வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2-பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 021 228 5932/ 021 222 5719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 06.02.2025 ஆம் திகதி முதல் 18.02.2025ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. 13.02.2025 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறை முறைகள் தொடர்பான முன் கூட்டம் **(pre-bid meeting)** எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.

8. கேள்விகள் யாவும் 19.02.2025 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர் , கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 19.02.2025 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் **(Bid Security)** ஒவ்வொரு பெறுகைக்கும் தனித் தனியாக செலுத்தப்படல் வேண்டும்.

10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரங்கள் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை முழங்காவில் | NP/04/45/RDHS/DF/Mu/ 2025/1 | ரூபா.70,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 02 | பிரதேச வைத்தியசாலை அக்கராயன்குளம் | NP/04/45/RDHS/CF/Ak/ 2025/2 | ரூபா.60,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 03 | பிரதேச வைத்தியசாலை பூநகரி. | NP/04/45/RDHS/CF/Po/ 2025/3 | ரூபா.60,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 04 | பிரதேச வைத்தியசாலை தர்மபுரம் | NP/04/45/RDHS/CF/Th/ 2025/4 | ரூபா.60,000.00 | 17.05.2025 | ரூபா.3000.00 |
| 05 | பிரதேச வைத்தியசாலை உருத்திரபுரம். | NP/04/45/RDHS/CF/Ur/ 2025/5 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |
| 06 | பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி | NP/04/45/RDIIS/CF/Va/ 2025/6 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |
| 07 | பிரதேச வைத்தியசாலை வேரவில். | NP/04/45/RDHS/CF/Ve/ 2025/7 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |
| 08 | பிரதேச வைத்தியசாலை பளை | NP/04/45/RDHS/CF/Pa/2025/8 | ரூபா.50,000.00 | 17.05.2025 | ரூபா.2500.00 |

**தலைவர்,பிராந்திய பெறுகைக் குழு,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**
TP- 021 228 5719, Fax- 021 228 5931, E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com (சி-2207)

# 200 மில்லியன் தேங்காய் இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

தேங்காய் உற்பத்தி பற்றாக் குறையின் மத்தியில் உள்ளூர் கைத்தொழில் மற்றும் நுகர்வோருக்கு ஆதரவளிக்கும் வகையில் தேங்காய்த் துருவல் பொருட்கள் மற்றும் உலர் தேங்காய்த் துண்டுகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

சட்ட விதிகளுக்கு இணங்குவதை உறுதிசெய்து உடனடி இறக்குமதியை ஆராயுமாறு கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சுகளுக்கு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விவசாயத் திணைக்களம் மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபை உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததைத் தொடர்ந்து குளிர்ந்த தேங்காய் துருவல், தேங்காய் (கொப்பரை அல்லாத), தேங்காய்ப்பால், பால் பவுடர் மற்றும் உலர்ந்த தேங்காய்த் துண்டுகளை இறக்குமதி செய்வதற்கான வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, சந்தையை ஸ்திரப்படுத்துவதற்கும், தேங்காய் சார்ந்த தொழில்களை நிலை நிறுத்துவதற்கும் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-8)

# இராசிபலன்

06.02.2025
தை 24, வியாழக்கிழமை
நவமி பின்னிரவு 1.27 மணிவரை

கார்த்திகை முன்னிரவு 9.59மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி.

**வளவன்**

**மேஷம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**ரிஷபம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உடல் நலன் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை.

**மிதுனம்** நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள்.

**சிம்மம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பணியில் தீவிரம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், உற்சாகமான நாள்.

**கன்னி** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், ரோக பயமுண்டு.

**துலாம்** செய்தொழிலில் கூட்டாளிகளிடம் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், சில பிரச்சினைகளைக் கண்டும்காணாமலும் இருப்பது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**விருச்சிகம்** காரிய அனுகூலமுண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும் , போசன சுகமுண்டு.

**மகரம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**கும்பம்** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**உன்னால் முடிந்ததையெல்லாம் செய்துவிட்டு இறைவனிடம் உதவிகேள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கீரிமலை- நகுலேஸ்வர ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரசுவாமி திருக் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 11.35 மணியளவில் கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள் ளது.

தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறவுள்ள மஹோற் சவங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு திருக் கல்யாணம், 25 ஆம் திகதி இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மஹாசிவ ராத்திரி தினமான 26 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழா வும் 27 ஆம் திகதி பி.ப 5 மணிக்கு கண்டகி தீர்த்தத் தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆதீன கர்த்தாவும் பிரதம குருவும் அறிவித்துள்ளனர். (6-8)

# பயணிகளின் தேவை கருதி யாழ்.புகையிரத நிலையத்தில் தொலைபேசி மின்னேற்றும் தொகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தின் பயணிகள் நடைமேடைப் பகுதியில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை முதல் பொது மக்கள் பாவனைக்காக, பொது கைத்தொலைபேசி மின்னேற் றும் தொகுதி ஆரம்பிக்கப்பட்ட தாக யாழ். புகையிரத நிலைய அத்தியட்சகர் தே. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில், யாழ்ப்பாணம் புகை யிரத நிலையத்திற்கு வரும் பயணி கள் நீண்ட காலமாக அவசர தேவயின் நிமித்தம் தமது கையடக்கத் தொலைபேசி களை மின்னேற்றம் செய்வது தொடர்பில் சிரமங்களை எதிர் நோக்கினர்.இதை நிவர்த்தி செய்து பொது மக்களுக்கு நல்ல சேவையை வழங்கும் வகையில் மேற்குறித்த திட் டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (க-6-8)

# யாழில் கேரள கஞ்சாவுடன் 3 இளைஞர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமான முறையில் 104 கிலோகிராம் கேரள கஞ் சாவை இரண்டு படகுகளில் கடத்தி வந்த மூன்று பேரை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். உதயபுரம் பகுதி கடற்பரப்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலி ஸாரினால் நேற்று குறித்த கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது.

இதன்போது குறித்த பகுதியை சேர்ந்த 24,25,27 வயதான மூன்று இளைஞர் களே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணை களுக்குப் பின்னர் மூன்று சந்தேக நபர்களையும் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்ப டுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6-8)

# தனங்கிளப்பு உப்பள நிலையத்தை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செய லர் பிரிவிற்குட்பட்ட தனங் கிளப்புப் பகுதியில் கடந்த காலத்தில் தடைப்பட்ட உப்பு உற்பத்தி நிலையத்தை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கில் தேசிய உப்பு நிறுவனத் தலை வர் நேற்று புதன்கிழமை குறித்த இடத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந் தார்.

புதிய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக உள்ளூர் உற் பத்தியை அதிகரித்தல்-இறக் குமதிச் செலவீனங்களை குறைத்தல் ஆகியவற்றுக்கு அமைவாக கடந்த காலத்தில் சாவகச்சேரி- தனங்கிளப்பு பகுதியில் இயற்கையாக உப்பு வளம் அடையாளம் காணப் பட்ட நிலையில் தற்போது அதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

கடந்த காலத்தில் மேற்படி உப்பளத் திட்டத்திற்கு பிரதேச மற்றும் மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டங்களில் உரிய அனுமதிகள், பிரதேச சபையின் அனுமதி மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போதிலும் குறித்த உப்பளத் திட்டம் தடைப்பட்டிருந்த நிலை யிலேயே தற்போது மீளவும் அதனை ஆரம்பிக்க நடவ டிக்கை எடுக்கப்படுகிறது.

மேற்படி திட்டம் ஊடாக பிரதேசத்தைச் சேர்ந்த வேலை யற்ற இளைஞர்கள்,பெண் தலைமைத்துவ குடும்பங் கள் மற்றும் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனவும்.

இவ் உப்பள நிறுவனம் தனியார், பொதுமக்கள் பங் குடைமை நிறுவனமாக செயற் படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேற்படி விஜயத்தின் போது உப்பு நிறுவனத் தலைவர் ஹயன் வெல்லால மற்றும் பணியாளர்கள் வருகை தந் திருந்தமை குறிப்பிடத்தக் கது. (6-30)

# கிண்ணத்தை சுவீகரித்தது சென்றலைட்ஸ் அணி




சென்றலைட்ஸ் அணி 2 இலக்குகளால் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

AB விளையாட்டுக் கழகம் நடத்திய 50 ஓவர்களைக் கொண்ட சென்றலைட்ஸ் பற்றீ சியன்ஸ் அணிகளுக்கிடை யிலான இறுதிப் போட்டி கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ்ப் பாணக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி களத்தடுப்பை மேற் கொண்டது.

முதல் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணியினர் 48.1 ஓவர்களில் சகல இலக்குக ளையும் இழந்து 176 ஓட்டங் களைப் பெற்றனர்.

சண்ஜீவன் -31, ஜவன்-26, பியற்றிக்-25, டிலோயன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். களத்தடுப்பில் நியூற்றன் 9.1 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 1,திசோன் 10 ஓவர் களில் 35 ஓட்டங்களைக் கொடு த்து 4, அலன்ராஜ் 10 ஓவர் களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு கள மிறங்கிய சென்றலைட்ஸ் அணி ஒரு நிலையில் 2 இலக் குகளை இழந்து 6.1 ஓவர்கள் நிறைவில் 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அடுத்துக் களமிறங்கிய அணியின் சிரேஷ்ட வீரனும் நம்பிக்கை நட்சத்திரமுமான டார்வின் உடன் சாரங்கன் இணைந்து 75 ஓட்டங்களை மிக நிதா னமாகத் துடுப்பெடுத்தாடி அணி யின் சரிவில் இருந்து மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து நிரோஜன், அஜய், ஆதவன், ராஜ், சன்செயன் போன்றோ ரின் நிதானமான துடுப்பெடுத் தாட்டத்தின் மூலம் சென்ற லைட்ஸ் அணி 37.4 ஓவர் களில் 8 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று வெற் றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. சாரங்கன்-64 (5 பவுண்ட றிகள், 3 சிக்சர் உட் பட) டார்வின்-18, நிரோஜன்29, அஜேய் -17, சண் சயன் ஆட்டமிழக்காது 10 ஓட்டங் களைப் பெற்றுள்ளனர்.

களத்தடுப்பில் டனிசீலியஸ் 10 ஓவர்களில் 45 ஓட்டங் களை கொடுத்து 2 இலக்குக ளையும், சண்ஜீவன் 3 ஓவர்க ளில் 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் டார்வின் 3 ஓவர்களில் 13 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக் கினையும் கைப்பற்றியுள்ளனர்.

வெற்றி பெற்ற சென்ற லைட்ஸ் அணிக்கு ரூ. 150 000 Runner - up ஆக வந்த பற்றீசியன்சுக்கு ரூ 100, 000 பணப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

தொடர் ஆட்ட நாயகன், சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் சகலதுறை வீரருக்கான விருதுகளை சென்றலைட்ஸ் அணி வீரர் சாரங்கன் தட்டிச் சென்ற நிலையில் அதற்கான வெற்றிக் கிண்ணமும், பணப் பரிசில்களும் வழங்கி வைக் கப்பட்டன. அதேவேளை சிற ந்த பந்து வீச்சாளராக சென்ற லைட்ஸ் அணி வீரர் திசோன் தெரிவான நிலையில் வெற்றிக் கிண்ணமும் பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது . (6-8)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## படவரைஞர்களை பதிவு செய்தல்/ புதுப்பித்தல்-2025

2025ஆம் ஆண்டில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கட்டட அனுமதிகளுக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று உரிய ஆவணங்களுடன் 25.02.2025ஆம் திகதி பி.ப 01.00மணிக்கு முன்னர் உரிய கட்டணத்தைச் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை (அதி விசேடமானது) 2135/54 ஆம் இலக்க 2021ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சட்ட ஒழுங்கு விதிகள் அட்டவணை 03 இற்கு அமைவாக (தகைமை பெற்ற நபர்கள்) விண்ணப்பிக்க முடியும்.

- Drafting Technology (Buildings) கற்கை நெறியினை (NVQ-Level - 5) பூர்த்திசெய்தவர்கள் உரிய சான்றிதழுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம். அல்லது Drafting Technology (Buildings) NVQ-Level - 4 கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்கள் Drafting Technology (Buildings) NVQ-Level - 5. கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை உரியகல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்கவேண்டும் எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற் கொள்ளலாம்.
- விண்ணப்ப படிவம் வழங்கும் திகதி :- 06.02.2025 தொடக்கம் 24.02.2025 வரை (அலுவலக நாட்கள் மு.ப. 09.00 பி.ப 03.00 மணிவரை)
- விண்ணப்பம் ஏற்கும் இறுதித் திகதி :- 25.02.2025 பி. ப 1.00 மணிவரை
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவு செய்தல் / பதிவுகளை புதுப்பிக்கத் தவறுமிடத்து எமது நகராட்சி மன்றத்தின் 2025ஆம் ஆண்டுக்கான படவரைஞர்களாக செயற்படமுடியாது.
- மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி.** 06.02.2025 (F-2201)

## 100 சூரிய மின்னுற்பத்தி திட்டம்; விரைந்து செயற்படுத்த நடவடிக்கை

### வலுசக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு காரணங்களால் தடைப்பட்டுள்ள 100 சூரிய மின்னுற்பத்தித் திட்டங்களை விரைவாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தேசிய மின் கட்டமைப்பில் 500 மெகாவாட் திறனை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார். இவற்றில் 10 மெகாவாட் வரையிலான சூரிய மின்சக்தி திட்டங்களும் உள்ளடங்குகின்றன. குறித்த திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகள் உள்ளிட்ட பல காரணங்களினால் அந்தத் திட்டங்களைச் செயற்படுத்த முடியாது போயுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

4,000 மெகாவாட் திறன் கொண்ட 49 சூரிய மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்குவது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும், சூரிய மின்சக்தி திட்டங்களிலிருந்து ஓர் அலகு மின் சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான விலை தொடர்பாக இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

## 2025 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் 2026 மாசி 28 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை-நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை, வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.03.2025 தொடக்கம் 28.02.2026 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்களை 06.02.2025ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 20.02.2025ஆம் திகதி வியாழக்கிழமை வரை அலுவலக நாட்களில் வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 400 மணி வரை கீழ்வரும் மீளளிப்பு செய்யப்படாத தொகையைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 1000.00 | 100,000.00 |
| சிற்றுண்டிச்சாலை | 1500.00 | 200,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 19.02.2025 ஆம் திகதி புதன்கிழமை 4.00 மணிக்கு முன்னர் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதி, நேரத்தின் பின் வழங்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. கேள்விப் பத்திரங்கள் யாவும் திரு.கணேஸ் விஜயசேகரன், தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி எனும் முகவரியிடப்பட்டு கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் 2025ஆம் ஆண்டு பங்குனி மாதம் தொடக்கம் 2026 ஆம் ஆண்டு மாசி மாதம் வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் சிற்றுண்டிச்சாலை/ வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோரல் விண்ணப்பம் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சிற்றுண்டிச்சாலை கேள்விப் பத்திரங்கள் 21.02.2025 (வெள்ளிக்கிழமை) பி.ப 2.30 மணிக்கும் வாகனப் பாதுகாப்பு நிலைய கேள்விப்பத்திரம் 21.02.2025 (வெள்ளிக்கிழமை) பி.ப 3.00 மணிக்கும் கேள்வி சபையினதும் சட்டவாளர் முன்னிலையிலும் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் நிச்சயமாக சமூகமளித்தல் வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விண்ணப்பதாரி பங்குகொள்ள முடியாதுவிடின் தங்கள் பிரதிநிதியை உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் மூலம் பங்குகொள்ளக்கூடியவாறு அனுப்பி வைக்க முடியும். இவ்விடயம் பற்றி தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.

**திரு.க. விஜயசேகரன், தலைவர்,**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.** (A2199)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 79/2, 79/4, இறாத்தலடி ஒழுங்கை, வட்டாரம்-06

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 06. இறாத்தலடி ஒழுங்கையிலுள்ள இல: 79/2, 79/4 ஆகிய ஆதனங்கள் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **செல்லர் புண்ணியமூர்த்தி பெண் சிவமதி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் ஓர் பகுதியினை **செல்லர் புண்ணியமூர்த்தியும் பெண் சிவமதியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்திற்கு தங்களில் 2ஆம் பேர்வழியின் தந்தையாராயிருந்து தன்னை ஏக உரித்தாளியாக விட்டுக் காலஞ்சென்ற நடேசு சித்திரபாலுவின் தாயாரான காலஞ்சென்ற நடேசு பெண் சின்னம்மாவின் சீதனமாயிருந்து அவர் இறக்க தங்களில் 2ஆம் பேரின் தந்தையாராகிய நடேசு சித்திரபாலுவிற்கும், நடேசு நவரத்தினத்திற்கும் முதுசமாக வந்தடைந்ததென்றும், குறித்த சித்திரபாலுவும் நவரத்தினமும் தங்களுக்குள் மனம் பொருந்தி சித்திரபாலுவுக்கு வடக்குப்புறமாகவும், நவரத்தினத்திற்கு தெற்குப்புறமாகவும் பிரிவிடுதல் செய்து நிந்தமாக ஆட்சிசெய்து வந்ததுடன் வடக்குப்புறமாகவுள்ள ஆதனத்தில் சித்திரபாலு எதுவித தடைகளோ/குறுக்கீடுகளோ இல்லாமல் ஆட்சி செய்து வந்தார் என்றும், அவர் இறந்த பின் அவரின் ஏக உரித்தாளியாகிய தங்களில் 2ஆம் பேர் எதுவித தடையும் குறுக்கீடும் இல்லாமல் ஆட்சி செய்து வந்ததாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 3558/12.10.2002 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தின் மற்றைய பகுதியினை நடேசு நவரத்தினம் ஆகியவர் குறித்த ஆதனம் தனது தாயாரான காலஞ்சென்ற நடேசு பெண் சின்னம்மாவின் சீதனமாயிருந்து, அவர் இறக்க தனக்கும் தனது சகோதரனாகிய நடேசு சித்திரபாலுவுக்கும் முதுசமாக வந்தடைந்ததென்றும், குறித்த சித்திரபாலுவும், குறித்த நவரத்தினமும் தங்களுக்குள் மனம் பொருந்தி சித்திரபாலுவுக்கு வடக்குப்புறமாகவும், நவரத்தினத்திற்கு தெற்குப்புறமாகவும் பிரிவிடுதல் செய்து நிந்தமாக ஆட்சிசெய்து வந்ததாகவும், குறித்த ஆதனத்தை தான் 37 வருடகாலமாக ஆண்டு வருவதாகவும், தனது ஆட்சியில் எதுவித குறுக்கீடுகளோ/தடைகளோ ஏற்படவில்லை எனவும். குறித்த ஆதனம் தனது முதுசமும் பிசகு தடையற்ற ஆட்சியுமானது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 4409/02.02.2004ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியான்து நிறைவேற்றப்பட்டுள்ளது.

**செல்லர் புண்ணியமூர்த்தியும் பெண் சிவமதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4410/02.02.2004ஆம் இலக்க உறுதியால் குறித்த நடேசு நவரத்தினம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**அருணாசலம் சிவலிங்கமும் பெண் திருச்செல்வியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6533/ 06.10.2013ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லர் புண்ணியமூர்த்தியும் பெண் சிவமதியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தையும் நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**செல்லர் புண்ணியமூர்த்தியும் பெண் சிவமதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6534/ 06.10.2013ஆம் இலக்க உறுதியால் குறித்த **அருணாசலம் சிவலிங்கமும் பெண் திருச்செல்வியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**குகன்குலசங்கம்** ஆனது பிரசித்த நொத்தாரிசு சாருஜா சிவநேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 412/ 11.11.2017ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லர் புண்ணியமூர்த்தியும் பெண் சிவமதியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையதானது.

குறித்த **குகன்குலசங்கம்** சார்பில் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குகன்குலசங்கத்திற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.** (3334)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# காசாவை அமெரிக்கா கைப்பற்றும்!

## இஸ்ரேல் பிரதமரை சந்தித்த போது திட்டவட்டமாக தெரிவித்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

**காசாப் பகுதியை அமெரிக்கா கைப்பற்றும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**



அமெரிக்காவில் இரு நாட்டு தலைவர்களும் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப், கடந்த ஜனவரி 20 இல் ஜனாதிபதியாகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றவுடன், "தான் ஜனாதிபதியாக இருந்திருந்தால், உக்ரைனில் போர் நடக்க விட்டிருக்க மாட்டேன்" என ட்ரம்ப் கூறியிருந்தார்.

இதற்கிடையே, தங்கள் நாட்டிற்கு வருமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பை ஏற்று, பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா வந்தடைந்தார். பின்னர் வெள்ளை மாளிகையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகிய இருநாட்டு தலைவர்களும் சந்தித்து பேசினர். அவர்கள் இருவரும் போர் நிறுத்தம், இரு தரப்பு உறவு உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்தினர்.

பின்னர் இஸ்ரேல் பிரதமர், ட்ரம்ப் இருவரும் கூட்டாக நிருபர்களை சந்தித்தனர். அப்போது, ட்ரம்ப் கூறியதாவது: தேவைப்பட்டால் காசா பகுதியை அமெரிக்கா கைப்பற்றும். அப்பகுதியில் எங்கள் நாட்டு இராணுவத்தினரைப் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்துவோம்.

இது மத்திய கிழக்குப் பகுதியில் அமைதிச் சூழலை உருவாக்கும். காசா பகுதியில் உள்ள வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை அகற்றுவோம்.

அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புகள் மற்றும் வீடுகள் ஆகிய வற்றை உருவாக்குவோம் என ட்ரம்ப் தெரிவித்தார்.

இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதாவது.

ஜனாதிபதி ட்ரம்பின் யோசனை வரலாற்றை மாற்றக்கூடிய ஒன்று. காசாவிற்கு ஒரு வித்தியாசமான எதிர்காலத்தைக் கற்பனை செய்கிறார்.

மத்திய கிழக்கின் புவிசார் அரசியலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார். (நி-8)

## மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகியது அமெரிக்கா

### கைச்சாத்திட்டார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகுவதற்கான உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கைச்சாத்திட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், குறித்த உத்தரவினூடாக பாலஸ்தீன ஏதிலிகளுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுத்து வரும் ஐக்கிய நாடுகளின் முகவரகத்துக்குத் தொடர்ந்தும் அமெரிக்காவினால் நிதியுதவி வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிய பிரதமர் மோடி

(டில்லி)

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவுக்கு நேற்று புதன்கிழமை சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அங்கு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்.

இது குறித்து எக்ஸ் பதிவில் பதிவிட்ட அவர்,

இன்று, பிரயாக்ராஜ் மகா கும்பமேளா நிகழ்வில் புனித சங்கமத்தில் நீராடிய பின்னர் பூஜை, அர்ச்சனை செய்யும் பெரும் பாக்கியம் கிடைத்தது.

மா கங்கையின் ஆசீர்வாதத்தால் எனக்கு அளவற்ற அமைதியும் திருப்தியும் கிடைத்தது.

அனைத்து நாட்டு மக்களின் மகிழ்ச்சி, செழிப்பு, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காக நான் அவளிடம் பிரார்த்தனை செய்தேன்.

ஹர்-ஹர் கங்கே! என்று கூறியுள்ளார். (நி-8)

# சுவீடன் கல்வி நிலையத்தில் துப்பாக்கிச்சூடு

## 11 பேர் உயிரிழப்பு

(ஸ்டாக்ஹோம்)

சுவீடனின் மத்திய பகுதியில் அமைந்துள்ள கல்வி நிலையமொன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சுமார் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.



துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களில் துப்பாக்கிதாரியும் அடங்குவதாக சுவீடன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓரேப்ரோ நகரில் அமைந்துள்ள கல்வி நிலையத்திலேயே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட ஏனைய நபர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டின் நோக்கம் உடனடியாக தெரியவில்லை.

இது சுவீடன் வரலாற்றில் நடந்த மிக மோசமான துப்பாக்கிச் சூடு என்று பிரதமர் உல்ஃப் கிறிஸ்டெர்சன் விவரித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீன தேசமே உறுதியான தீர்வு—சவுதி அரேபியா வலியுறுத்து

**(ஜெர்த்தா)**

**காசா மக்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என குறிப்பிட்டுள்ள சவுதிஅரேபியா, பாலஸ்தீன தேசமொன்று உருவாக்கப்படாவிட்டால் இஸ்ரேலுடன் உறவினை ஏற்படுத்த முடியாது எனவும் தெரிவித்துள்ளது.**

பாலஸ்தீனியர்களிற்கு என ஒரு தேசம் என்ற தனது நீண்ட கால நிலைப்பாட்டை நேற்று புதன்கிழமை சவுதி அரேபியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

காசாவை அமெரிக்கா கையகப்படுத்த விரும்புகின்றது என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ள பின்னர் சவுதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சு இது குறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தனது முன்னைய நிலைப்பாட்டை மீள வலியுறுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் நிலைப்பாடு உறுதியானதாகவும் தளர்ச்சியற்றதாகவும் காணப்படுவதாக தெரிவித்துள்ள அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர்- பிரதமர் 2024 செப்.18 ஆம் திகதி சூரா கவுன்சிலின் முதலாவது அமர்வில் ஆற்றிய உரையில் தனது இந்த நிலைப்பாட்டினைத் தெளிவாக வெளியிட்டுள்ளார் என குறிப்பிட்டுள்ளது.

2024 இல் ரியாத்தில் இடம்பெற்ற அராபிய- இஸ்லாமிய உச்சி மாநாட்டில் அவர் இதனை வலியுறுத்தினார். 1967 ஆம் ஆண்டின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்ட பாலஸ்தீன தேசத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். பாலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமிப்பதை நிறுத்த வேண்டும் என கோரினார் என சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)



## ஈரான் என்ற நாடே இருக்காது!

### எச்சரிக்கை விடுக்கிறார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

ஈரான் என்ற நாடே இருக்காது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடுந்தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதனை முன்னிட்டு, ஆளும் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஜனாதிபதி ஜோ பைடன், குடியரசுக் கட்சியை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் பொதுமக்களைச் சந்தித்து தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தனர்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தின் பட்லர் பகுதியில் நடந்த பேரணியில் ட்ரம்ப் பங்கேற்றார்.

அப்போது, ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில், துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர், தாமஸ் குரூக் என்ற 20 வயது இளைஞர் எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டார்.

இந்த தாக்குதலுக்கு பின், அமெரிக்க உளவு பிரிவினர் அவரை மேடையில் இருந்து உடனடியாக பாதுகாப்பாக வாகனத்தில் அழைத்து சென்றனர். இந்நிலையில், ட்ரம்பை கொலை செய்வதற்கு




ஈரான் நாட்டில் சதித் திட்டம் தீட்டப்பட்டு உள்ளது என்ற அதிர்ச்சி தகவல் வெளிவந்து உள்ளது.

ஈரான் நாட்டின் குத்சு படையின் தலைவராக இருந்தவர் காசிம் சுலைமானி. இவர், கடந்த 2020 ஆம் ஆண்டில் ஆளில்லா விமான மூலம் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார். இதனை தொடர்ந்து, அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப் மற்றும் முன்னாள் வெளியுறவு செயலாளர் மைக் பாம்பியோ உள்ளிட்டோருக்கு ஈரானில் இருந்து கொலை மிரட்டல்கள் விடப்பட்டன. இதன் விளைவாக ட்ரம்பிற்கு எதிராகத் தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இடம் பெற்று வருகின்றன. இந்த ஈரானின் சதி முறியடிக்கப்பட்டதாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நீதித்துறை அறிவித்தது.

இந்நிலையில் ஈரான் மீது அதிகப்படியான அழுத்தம் கொடுக்கும் உத்தரவுகளில் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டார். அப்போது செய்தியாளர் களைச் சந்தித்த அவர் ஈரான் தன்னைக் கொன்றால் அதை 'அழிக்க' வேண்டும் என்று ஆலோசகர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக கூறினார். ஈரான் என்ற நாடே இருக்காது அவர்கள் அழிக்கப்படுவார்கள், எதுவும் மிச்சமிருக்காது எனக் கடும் எச்சரிக்கை விடுத்தார். (நி-8)

## உலகளவில் அதிகரிக்கும் நுரையீரல் புற்றுநோய்



(லண்டன்)

உலகளவில் புகைப் பிடிக்காதவர்களிடையே நுரையீரல் புற்றுநோய் விகிதம் அதிகரித்து வருவதாக ஒரு புதிய ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள லான்செட் சுவாச மருத்துவ இதழ் நடத்திய ஆய்வில், புகைபிடிக்காதவர்களிடையே அடினோகார்சினோமா எனப்படும் ஒரு வகை நுரையீரல் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகிறது என்பது தெரியவந்துள்ளது.

அந்தப் புற்றுநோய் நிலையில் உள்ள நோயாளிகளின் எண்ணிக்கை 53 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இந்த நோய் பெண்கள் மற்றும் ஆசிய மக்களிடையே அதிகமாகக் காணப்படுவதாகவும் வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இடம்பெற்ற

## பெண்களுக்கான துடுப்பாட்டம்





(யாழ்ப்பாணம்)

யாழ் சமூக செயற்பாட்டு மையத்தினால் (JSAC), unicef நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் Sports For Development & Peace செயற்றிட்டத்தினூடாக வடக்கின் இளம் பெண்களுக்கான மாபெரும் கடினப் பந்து துடுப்பாட்டத் திருவிழா யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தத் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்கள் ஆகியவற்றை சேர்ந்த சுமார் 70 இளம் பெண்கள் பங்கு பற்றியிருந்தார்கள்.

இந்நிகழ்வில் unicef நிறுவன சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சர்மிலி சதீஸ் , பிரதேச செயலர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டுக் கழகங்கள், துடுப்பாட்ட ரசிகர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கில் முதன்முதலாக இடம்பெற்ற பெண்களுக்கான கடினப்பந்து போட்டி என்பதுடன் பெண்கள் மத்தியில் துடுப்பாட்ட ஆர்வத்தினை அதிகரிக்கின்ற வகையில் இத்துடுப்பாட்ட திருவிழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 600 | 450 | 700-750 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1100 | 1100 | 1000 | 900-1100 | 1000 |
| தக்காளி | 300 | 350 | 250 | 220 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 200 | 200 |
| கோவா | 350 | 280 | 200 | 350 | 400 |
| கரட் | 450 | 200 | 600 | 580 | 600 |
| பூசணி | 120 | 120 | 150 | 120 | 200 |
| புடோல் | 250 | 250 | 200 | 180-200 | 300 |
| வாழைக்காய் | 250 | 140 | 150 | 130-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 550 | 400 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 250 | 150 | 200 |
| பாகற்காய் | 550 | 500 | 500 | 500-550 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 250 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 180 | 150 | 250 |
| பயற்றங்காய் | 600 | 500 | 500 | 400-450 | 500 |
| லீக்ஸ் | 350 | 380 | 350 | 350 | 500 |
| பீற்றூட் | 550 | 300 | 400 | 350 | 400 |
| கறிமிளகாய் | 1100 | 1000 | 600 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1400 | 1500 | 2000 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 350-400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 700 | 500 | 300 | 400 | 550 |
| கீரை – 1 பிடி | 120 | 100 | 120 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 100-150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 240 | 180 | 150-220 | 200-260 |
| இராசவள்ளி | 550 | 500 | 500 | 400-500 | 800 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 400 | 100-150 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 150 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 316



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## ஏழுவகை மனிதர்கள்

இந்த உலகத்தில் ஏழு வகையான மனிதர்கள் இருக்கிறார்களாம் சேர். டாக்டர் எட்வர்ட் பாட்ச் என்கிறவர் சொல்கிறார். மனிதர்களின் மனநிலை அடிப்படையில் அவர்களை ஏழுவகையாகப் பிரிக்கலாம் என்கின்றார்.

அது எப்படித் தெரியுமா? முதல் வகை பயந்த குணமுள்ளவர்கள், மிகவும் பயந்த சுபாவம், வீட்டில் கூட வாயைத் திறக்க மாட்டார்கள். சாப்பிடும் போது மட்டும் தான் வாயைத் திறப்பார்கள் அப்படி. இவர்கள் இந்த ரகம்.

இரண்டாவது வகை சஞ்சலப்படுகின்றவர்கள். எதற்கெடுத்தாலும் கலக்கம், குழப்பம் அப்படியே காலம் தள்ளுபவர்கள் பல பேரைப் பார்த்திருப்பீர்கள் அவர்கள்தான் இந்த ரகம்.

மூன்றாவது வகை யதார்த்த உலகை மறந்து கற்பனை உலகிலே மிதப்பவர்கள். இளைஞர்கள், கவிஞர்கள் இப்படிப் பல பேர் இருக்கிறார்கள். எப்போது பார்த்தாலும் கற்பனை உலகத்திலே மிதந்துகொண்டிருப்பார்கள்.

கிட்டப் போய் ஒரு மாதிரியாக இருக்கிறீர்களே என்று கேட்டுப் பாருங்கள். ஒரு அற்பப் புழுவைப் பார்ப்பது மாதிரி உங்களைப் பார்ப்பார்கள். அதோ அந்த வானத்து நிலா என்னை வா என்று கூப்பிடுகிறது.

எனக்கு விரைவில் ஒரு நாள் சிறகுகள் முளைக்கும். சிறகடித்துப் பறந்து செல்வேன். என் செல்ல நிலாவைக் கொஞ்சி விட்டு திரும்பி வருவேன் என்பார்கள்.

கொஞ்சுவது அப்புறம் இருக்கட்டும் இப்போது கஞ்சிக்கு வழியைப் பாருடா என்றால் அதைக் காதிலே வாங்க மாட்டார்.

நாலாவது வகை மனிதர்கள் எப்படி என்றால் தனிமை உணர்வு மிக்கவர்கள். இவர்களெல்லாம் மற்றவர்களோடு சகஜமாக நெருங்கிப் பழகுவதில் தான் உண்டு. தன் வேலை உண்டு என்று போவார்கள். அடுத்த வீட்டிலே இருப்பது யார் என்று கேட்டால் கூட அடுத்த வீடு ஒன்று இருக்கிறதா என்று கேட்பார்கள்.

அவர்களிடம் மேற்கொண்டு எதைப் பேசுவது. ஐந்தாவது வகை மனிதர்கள் எப்படி என்றால் மற்றவர்கள் செல்வாக்கிற்கு உட்பட மறுப்பவர்கள். அடுத்தவர் செல்வாக்கு இங்கு ஆட்படுவதில்லை.

நான் யார் தெரியுமா? என்று கேட்டால் அதைத் தெரிந்து எனக்கு என்ன ஆகபோகிறது என்பார்கள்.

ஆறாவது வகை எப்பவும் எதிலும் பற்று இல்லாமல் இருப்பவர்கள்.

இது ஒரு துறவு மனப்பான்மை. இயல்பாகவே சில பேர் இப்படி உண்டு. அவர்களுக்கு எதிலும் ஒரு ஈடுபாடு இருக்காது. ஏழாவது வகை மனிதர்கள் மற்றவர் கவலையைத் தன்னுடைய கவலையாக்கி கவலைப்படுபவர்கள். இவர்கள் மகாத்மாக்கள். தான் வேறு, அடுத்தவர்கள் வேறு என்ற எண்ணம் இவர்களுக்கு வருவதில்லை! அதனாலே அடுத்தவர்களுக்கு ஒரு துன்பம் வந்தால் அதை தன்னுடைய துன்பமாக எடுத்துக் கவலைப்படுபவர்கள் இவர்கள்.

ஆகக்கூடியது இப்படி ஏழு வகையான மனிதர்களை அடையாளம் காட்டினார் அந்த நிபுணர். இதில் நாம் எந்த ரகத்தில் வருகிறோம் என்பதை நாம் தான் அடையாளம் கண்டுபிடிக்க வேண்டும்.

எனக்குத் தெரிந்து ஒரு மனிதர் உண்டு அவர் ஒரு வித்தியாசமான விதம். எப்பவும் அடுத்தவர்கள் நல்லா இருக்க வேண்டும் நாமும் சந்தோசமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்.

அவருக்கு ஒரு சமயம் திடீரென்று உடல் நலன் குன்றிப் போனது. டாக்டரிடம் போனார். பணம் கொடுத்தார் வைத்தியம் பார்த்தார். அவர் எழுதியிருந்த மருந்துச் சீட்டை வாங்கினார்.

ஒரு மருந்துக்கடைக்குப் போனார். பணம் கொடுத்து மருந்து வாங்கினார். அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தார்.

அதன் பிறகு அந்த மருந்தைச் சாப்பிடாமல் அப்படியே வைத்தார். அவரைப் பார்த்து கேட்டேன். ஏன் சார் இப்படிச் செய்கிறீர்கள் வீண் செலவு தானே இது. நீங்கள் ஏன் டாக்டரிடம் சென்று பணம் செலவு செய்தீர்கள்? என்று.

டாக்டர் வாழ வேண்டும் இல்லையா அதற்காகத்தான் என்றார். சரி எதற்கு மருந்து வாங்கினீர்கள் என்று கேட்டேன் மருந்துக்கடைக்காரர் வாழ வேண்டும் இல்லையா அதற்காகத்தான் என்றார்.

அப்போது ஏன் மருந்தைச் சாப்பிடாமல் வைத்தீர்கள் என்றேன். நான் வாழ வேண்டும் இல்லையா என்றார் அந்த நபர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேங்காய் ஏற்றுமதிக்கு தடையாக அரச படைகள்

## பாராளுமன்றில் ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**தேங்காய் ஏற்றுமதிக்குத் தடையாக இந்த நாட்டின் அரசபடைகளே காணப்படுவதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.**


பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதத்திலே நான் குறிப்பட விரும்புவது என்னவெனில், தேங்காய் ஏற்றுமதிசெய்வதற்கு இடையூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக வடக்கு- கிழக்கில் மக்களுக்குச்சொந்தமான காணிகளை படையினர் இன்னமும் விடுவிப்புச் செய்யப்படவில்லை.

முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தினர் அபகரித்துள்ள மக்களின் பூர்வீகக் காணிகளில் அதிகளவு தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையும், அக்காணிகளின் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த காணிகள் இராணுவத்தின் பிடியிலிருந்து உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (6-8-299)

# கஞ்சாவுடன் இருவர் கைது



(சாவகச்சேரி)


பூநகரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வாடியடி பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை காலை 60 கிலோ 850 கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

பட்டா வாகனத்தில் 28 பார்சல்களாகக்கட்டி எடுத்துச் சென்ற வேளையே மேற்படி கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேக நபர்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-30)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராக விஜயகுமார்



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராக இராசரட்ணம் விஜயகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் காணப்பட்ட பிரதேச செயலாளர் பதவி வெற்றிடத்தினை நிவர்த்தி செய்யும் வகையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராக இராசரட்ணம் விஜயகுமார் நேற்று முன்தினம் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (6-8-299)

# பயன்தரு தென்னை மரங்களை துவம்சம் செய்த காட்டு யானை

## கோம்பாவிலில் சம்பவம்



(நெளுக்குளம்)

கைவேலி கிராமத்திற்குள் அத்துமீறி நுழைந்த காட்டு யானை ஒன்றினால் 40 பயன்தரு தென்னை மரங்கள் அழிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.


முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு காட்டு யானை ஒன்று புகுந்து 40 பயன்தரும் தென்னை மரங்களை அழித்துள்ளது.

அண்மைய காலங்களாக காட்டுயானைகள் அத்துமீறி குடியிருப்பு பகுதிகளிலும் வயல் நிலங்களிலும் நுழைந்து பயிர்களை அழித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (6-8-299)

## விபத்துக்களைத் தடுக்க

# கட்டாக்காலி மாடுகள்

## பிரதேச சபையால் மடக்கிப் பிடிப்பு



(நெளுக்குளம்)

போக்குவரத்திற்கு இடையூறாக வீதிகளிலிருந்த 100 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்களை தடுக்கும் நடவடிக்கையாக நேற்று முன்தினம் இரவு பொலிஸாரின் உதவியுடன் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, மந்துவில், சிவநகர், கோம்பாவில், கைவேலி ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கை நேற்றைய தினம் இடம்பெற்றிருந்தது.

குறித்த நடவடிக்கையில் 100 இற்கும் அதிகமான கட்டாக்காலி மாடுகள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் செயலாளர் ச.கிருசாந்தன் கூறும் போது பிடிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கால்நடை வைத்திய அலுவல கங்களினூடாக அன்றைய தினமே காதுப்பட்டி அணிவித்து, தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துபவர்களிற்கு மட்டுமே குறித்த கால்நடைகளை வழமையான நடைமுறைகளின் பிரகாரம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் உப அலுவலக பிரிவில் வீதிகளில் கால்நடைகள் மிக குறைந்த அளவில் காணப்பட்டன அவை அங்கிருந்து சபைக்கு வரும் வழியில் வேலிகள் அற்ற தனியார் காணிகளினூடாக தப்பி சென்றுவிட்டன.

அதேவேளை பெரிய மாடு ரூ.3000, சிறிய மாடு ரூ 1000, மீளவும் அதே கால்நடைகள் பிடிபடுமிடத்து ரூ.5000, நாள் ஒன்றுக்கான பராமரிப்பு கூலி ரூ.500 விகிதம் அறவிடப்படும் எனவும் தெரிவித்தனர். (6-8-299)

## மன்னார் வங்காலையில்

# கனிய மணல் ஆராய்ச்சி

## மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

(மன்னார்)

மன்னார் வங்காலை கிராமத்தில் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கனிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழுவினர் அக் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் அவ்விடத்தை விட்டு வெளியேறிச்சென்றுள்ளனர்.

சுமார் 20 பேர் அடங்கிய குழுவினர் குறித்த பகுதிக்கு வருகை தந்து கனிய மணல் ஆராய்ச்சியை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து சந்தேகம் கொண்ட கிராம மக்கள் அவ்விடத்திற்குச் சென்று அவர்களுடன் விசாரணைகளை முன்னெடுத்த போது, தாம் பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்துள்ளதாகவும் கனிய மணல் ஆராய்ச்சியை மேற்கொண்டு ஆராய்ச்சி வெற்றி பெற்றால் கனிய மணல் அகழ்வை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தாங்கள் உரிய அனுமதியைப் பெற்று கொண்டு வருகை தந்ததாக குறித்த குழுவினர் தெரிவித்த போதும் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாத நிலையில் அவர்கள் வருகை தந்தமை தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் கிராம மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கனிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குறித்த குழுவினர் அங்கிருந்து வெளியேறிச் சென்று இருந்தனர். (6-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

697





**40 ஆம் அத்தியாயம்**
**ஆனைமங்கலம்**

நம் கதாநாயகிகளில் ஒருத்தியான வானதி அடிக்கடி நினைவு இழக்கும் வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறாள் அல்லவா? இந்த ஒரு தடவை மட்டும் வாசகர்கள் அதைப் பொறுக்கும்படி வேண்டுகிறோம். ஏனெனில், அவளுடைய நோய் நீங்கும் காலம் நெருங்கி விட்டது.

வானதிக்கு நினைவு சிறிது வந்தபோது முதலில் அவள் ஊசலாடுவது போலத் தோன்றியது. பின்னர் அவள் தான் வானவெளியில் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாக எண்ணினாள். "ரிம் ரிம்", "ஜிம் ஜிம்" என்று மழைத்தூறலின் சத்தம் கேட்டது. குளிர்ந்த காற்று "குப் குப்" என்று உடம்பின்மீது வீசிற்று. அதனால் தேகம் சிலிர்த்தது. சரி சரி, மேக மண்டலங்களின் வழியாக வானுலகிற்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று எண்ணினாள். சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தது, இடையிடையே மின்னல் வெளிச்சம் பளிச்சிட்டு மறைந்தது.

முதன் மந்திரி கடைசியாகக் கஜேந்திர மோட்சத்தைப் பற்றிக் கூறியதும், யானை அதன் துதிக்கையினால் தன்னைச் சுற்றி வளைத்துத் தூக்கியதும் இலேசாக நினைவு வந்தன. முதன் மந்திரி அநிருத்தர் கூறியபடியே நடந்து விட்டது. 'மண்ணுலகில் என் ஆயுள் முடிந்து இப்போது மோட்சத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். மோட்ச உலகில் தேவர்களையும், தேவிகளையும் பார்ப்பேன்.'

'ஆனால் எல்லாத் தேவர்களிலும் என் மனத்துக்குகந்த தெய்வமாகிய அவரை அங்கே நான் பார்க்க முடியாது. மனத்துக்கு இன்பமில்லாத அத்தகைய மோட்ச உலகத்துக்குப் போவதில் என்ன பயன்?'

அடடே! இது என்ன ஊசலாட்டம்! உடம்பை இப்படித் தூக்கித் தூக்கிப் போடுகிறதே! ஆனால் தலை வைத்திருக்கும் இடம் மெத்தென்று சுகமாயிருக்கிறது. தாயின் மடியைப் போல் இருக்கிறது. ஏன்! தாயைக் காட்டிலும் என்னிடம் பிரியம் வைத்த இளைய பிராட்டியின் மடியைப் போலவும் இருக்கிறது! ஆ! குந்தவைதேவி இப்போது பழையாறையில் என்ன செய்து கொண்டிருக்கிறாரோ? என்னைப் பற்றி செய்தி அவருக்கு இதற்குள் எட்டியிருக்குமோ?

'மோட்ச உலகத்துக்கு வான வெளியில் மேக மண்டலங்களின் வழியாகப் பிரயாணம் செய்வது சரிதான். ஆனால் என்ன வாகனத்தில் பிரயாணம் செய்கிறேன்? சொர்க்க லோகத்துப் புஷ்பக விமானமா இது? அல்லது தேவேந்திரனுடைய ஐராவதம் என்ற யானையா? அப்பா! யானை என்றாலே சிறிது பயமாகத் தானிருக்கிறது! யானையும் அதன் துவண்டு, வளையும் துதிக்கையும்! அப்படித் துவளும் துதிக்கையில் தான் எவ்வளவு பலம் அதற்கு? போனது போயிற்று! இனி அதைப் பற்றிப் பயம் என்ன? கவலை என்ன?'

'ஆனால் தலை வைத்திருக்க இடம் அவ்வளவு பட்டுப்போல் மிருதுவாயிருக்கும் காரணம் யாது? சுற்றிலும் இருளாயிருப்பதால் ஒன்றும் தெரியவில்லை. கையினால் துளாவிப் பார்க்கலாம். உண்மையில், பட்டுத் திரைச் சீலை மாதிரித் தான் தோன்றுகிறது. கொஞ்சம் ஈரமாயும் இருக்கிறது.'

'ஆகா! இது என்ன? என் கன்னங்களை யார் தொடுகிறது? மல்லிகைப் பூவைப் போன்ற மிருதுவான கரம் அல்லவா தொடுகிறது?'

"வானதி! வானதி!" "அக்கா! நீங்கள் தானா?" "நான்தான். வேறு யார்?" "நீங்கள் கூட என்னுடன் மோட்ச உலகத்துக்கு வருகிறீர்களா?" "மோட்ச உலகத்துக்குப் போக அதற்குள் உனக்கு என்னடி அவசரம்? இந்த உலகம் அதற்குள்ளே வெறுத்துப் போய் விட்டதா?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பொறாமை வேண்டாம்



ஒரு கிராமத்தில் பண்ணையார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தன் வீட்டில் ஒரு நாயையும் பொதி சுமக்க ஒரு கழுதையை வளர்த்து வந்தார். கழுதையையும் வேலைக்காரன் ஒருவன் கவனித்து வந்தான். அவன் பண்ணையாரிடம் வேலைக்காரனாக பணியாற்றி வந்தான்.

பண்ணையாருக்கு அவர் வளர்க்கும் நாய் மேல் அதிக அன்பு இருந்தது. ஏனென்றால், அது இரண்டுமுறை திருடர்களைப் பிடித்து அவரிடம் ஒப்படைத்துள்ளது. அவர் வெளியே சென்று வீட்டிற்கு வந்தால் தன் வாலை ஆட்டிக்கொண்டே நன்றியைக் காட்டும்.

அவர் அமர்ந்திருக்கும் போது உரிமையாக சென்று அவர் மடியில் படுத்துக்கொள்ளும். அவர் முகத்தை ஆசையாக முத்தமிடும். பண்ணையார் அதற்கு இறைச்சித் துண்டுகளையும் உயர்ந்த ரக உணவுகளையும் கொடுத்து மிகவும் அன்பாக வைத்திருந்தார்.

பண்ணையார் வீட்டில் வளரும் கழுதை பண்ணையார் நாய்க்கு மட்டும் இவ்வளவு சலுகைகளை வழங்குகிறாரே என்று பொறாமைப்பட்டது. பண்ணையார் நாய்க்கு கொடுக்கும் அத்தனை சலுகைகளையும் தான் பெற வேண்டும் என்று நினைத்தது.

நாய் போல் தானும் ஒரு நாள் பண்ணையார் மடியில் படுத்து அவர் முகத்தை முத்தமிட வேண்டும் எனத் திட்டம் தீட்டியது. கழுதையின் எண்ணத்தை நாய் புரிந்து கொண்டது. அது கழுதையை பார்த்து, "நண்பா, எனக்கு கிடைக்கும் சலுகைகளைக் கண்டு நீ பொறாமைப் படாதே, நான் செய்வதைப் போன்றே நீ செய்தால் பண்ணையார் பொறுத்துக் கொள்ள மாட்டார். உன்னை நன்றாக அடித்து வீட்டை விட்டு துரத்தி விடுவார்" என்று அறிவுரை கூறியது.

கழுதை நாய் சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. அது நாயைப் பார்த்து, "நண்பா நடப்பதை நீயே பார். பண்ணையார் என் செயலால் எப்படி மகிழ்ச்சி அடையப் போகிறார் என்பதை பார்" என்று கூறியது.

அதற்கு பிறகு நாய் எதுவும் பேசவில்லை. அன்றைக்கு பண்ணையார் வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி அணிந்து கொண்டு வீட்டில் அமர்ந்து புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார்.

உடனே கழுதை விரைவாக ஓடிச் சென்று அவருடைய மடியில் அமர்ந்து கொண்டது.

கழுதை அவருடைய முகத்தில் முத்தமிட்டது பின்னர் பெரும் குரல் எடுத்து கத்தியது. பண்ணையாருக்கு கடும் கோபம் வந்தது.

அருகில் இருந்த உருட்டுக் கட்டையை எடுத்து அந்தக் கழுதையை நன்கு அடித்து விட்டார். வலி தாங்க முடியாத கழுதை கத்திக் கொண்டே காட்டுக்குள் ஓடியது.

நீதி : பிறருக்கு கிடைக்கும் சலுகைகளைப் பார்த்து நாம் பொறாமைப் படக் கூடாது. அவ்வாறு பொறாமைப் பட்டால் அது நமக்கு அழிவு தான் உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளில் தேங்கிக்கிடப்பதே முன்னேற்றத்திற்கான முக்கிய தடையாகும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள மக்களை பகையாமல் இருப்போம்

இந்த நாட்டில் தமிழ் மக்கள் பட்ட துன்ப துயரங்கள், உயிரிழப்புகள் கொஞ்சமல்ல.

இன்னமும் அந்த வடுக்கள் எங்களை ரண மாக வதைக்கிறது.

இவ்விதம் தமிழ் மக்கள் மீது நடந்த அட்டூழியங்கள், அநியாயங்களுடன் சிங்கள மக்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை தமிழ் மக்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது சிங்களப் பேரினவாதத்தை விதைத்து அதன்மூலம் அரசியல் பிழைப்பை நடத்திய சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களே எமக்கு நடந்த அத்தனை துன்பங்களுக்கும் மூலகாரணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதுதவிர, ஆட்சியாளர்களும் அவர்களின் அடிவருடிகளும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட பிகமோசமான பிரசாரங்கள் சிங்கள மக்களை தவறாக வழிநடத்திய தென்ற உண்மையையும் நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது சிலர் எங்களை முறைப்போடு பார்க்கலாம்.

ஆனால், எப்போதும் நாம் உண்மையின் பக் கம் நின்றாக வேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்தவர்கள் நாங்கள் என்று மார்தட்டி ஆட்சி செய்த மகிந்த ராஜபக்ஷ தரப்பைச் சிங்கள மக்கள் ஆட்சிப் பீடத்திலிருந்து துரத்தினர்.

இவ்வாறு துரத்தியதன் மூலம், தமிழ் மக்களை மகிந்த தரப்பு ஈனத்தனமாகக் கொன்று குவித்தது என்ற உண்மையை சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டனர் எனப் பொருள் கொள்ளலாம்.

தவிர, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த சிங்கள மக்கள்; பொதுத் தேர்தலின்போது அநுர குமார திஸாநாயக்க தலை மையிலான தேசிய மக்கள் சக்தியை மிகப் பெரும் பலத்துடன் ஆட்சிப்பீடமேற்றினர்.

ஆக, இந்த நாட்டில் நடக்க வேண்டிய ஒரு காரியத்தை சிங்கள மக்கள் செய்துள்ளனர். அதாவது கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து துரத்திய செயல் தமிழ் மக்களாகிய எங்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு எங்களின் வாக்குப் பலம் போதுமானதாக இல்லை. இருந்தும் நாங்கள் செய்ய வேண்டியதை சிங்கள மக்கள் செய்துள்ளனர்.

எனவே சிங்கள மக்களை நாங்கள் எங்களுக்கான பலமாக ஆக்க வேண்டும்.

இதை நாம் கூறும்போது, சிலர் இதை ஒரு விசித்திரமாகப் பார்க்கலாம்.

பரவாயில்லை, நாம் இங்கு கூறவருவது, சிங்கள மக்களைப் பகைப்பதை நாம் முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

உதாரணத்துக்கு தையிட்டி விகாரையை உடைப்போம் என்ற சொற்பதம் அவ்வளவு நல்லதல்ல.

**இந்த சொற்பதம் கோட்டாபயவை தாங்கள் துரத்தியது பிழையோ என்று சிங்கள மக்களை நினைக்க வைக்கும்.**

எனவே வன்மத்தனமான சொற்பிரயோகங்களைத் தவிர்ப்போம்.

மாறாக, சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட தையிட்டி விகாரை தொடர்பில் சட்டரீதியாக அணுகுவோம். அது எல்லோர்க்கும் ஏற்புடையது.

எனவே தயவுசெய்து விகாரையை உடைப்போம் என்று கூறி, எங்களின் நியாயங்களை உணர்ந்த – உணர்ந்து வருகின்ற சிங்கள மக்களைப் பகைக்காமல் பார்த்துக் கொள்வோம்.

# உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான நீதிமன்ற வியாக்கியானம் இதுவரை கிடைக்கவில்லை

## சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் இதுவரையில் தமக்குக் கிடைக்கவில்லை எனச் சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

இந்த விடயம் கடந்த நாட்களில் முக்கிய பேசு பொருளாகவும் இருந்தது.

நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைத்துள்ளதாக அறியக்கிடைக்கின்ற போதிலும் அதனை வெளிப்படுத்துவதற்குச் சபாநாயகருக்கு முடியாமல் போயுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன, குறித்த வியாக்கியானம் இதுவரையில் தமக்குக் கிடைக்கவில்லை எனப் பதிலளித்தார். இதனையடுத்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, கடந்த வாரம் ஊடகச் சந்திப்பு ஒன்றில் கருத்துரைத்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, நீதிமன்றத் தின் வியாக்கியானம் சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டதாகச் சுட்டிக்காட்டினார்.

எனவே, சபாநாயகருக்கு உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைக்கவில்லை என்றால் எதற்காக அமைச்சரவைப் பேச்சாளர் அவ்வாறான கருத்தை வெளியிட்டார் என்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சபாநாயகர் முன்வைக்கும் தகவலே சரியானது எனக் குறிப்பிட்டார்.

இதனையடுத்து கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகரின் ஊடாக இடம்பெற வேண்டிய செயற்பாடு உரிய முறையில் இடம்பெறாத காரணத்தில் சபாநாயகரினதும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள தினம் உள்ளிட்ட தகவல்களும் ஆளுந்தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கின் தீர்ப்பு எந்த காலப்பகுதிக்குள் அறிவிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார்.

இதற்கமையவே கணிப்பின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும் திகதி உள்ளிட்ட விபரங்கள் அறிவிக்கப்பட்டதாகவும் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதனையடுத்து கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க, சபாநாயகர் முன்வைக்கும் கருத்துக்கும் அமைச்சரவைப் பேச்சாளர் முன்வைக்கும் கருத்துக்கும் இடையே பரஸ்பர முரண்பாடு காணப்படுவதாகத் தெரிவித்தார்.

இந்தநிலையில், இறுதியாக பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ன, பாராளுமன்றத்தின் சபாநாயகர் என்ற அடிப்படையில் தாம் கூறுவதனை மாத்திரம் கவனத்தில் கொள்ளுமாறு தெரிவித்தார். (ம-7)

## ஆளுங்கட்சியினர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நால்வர் பொலிஸில் சரண்

பருத்தித்துறைப்பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த எஞ்சிய நான்கு பேரும் நேற்றுப் புதன் கிழமை (05) பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

கடந்த ஜனவரி 15ஆம் திகதி பிற்பகல் பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் இருவர் படுகாய மடைந்திருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் எட்டு சந்தேக நபர்களில் ஏற்கனவே மூவர் பருத்தித்துறை பொலிஸில் சரணடைந்த நிலையில் அவர்கள் எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (04) மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டு நேற்றுப் புதன்கிழமை(05) நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் அவரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் எஞ்சிய நால்வரும் நேற்றுப் புதன் கிழமை(05) பருத்தித்துறைப் பொலிஸில் சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

## குஷ் போதைவஸ்துடன் இந்தியப் பிரஜை கைது

12.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான 1 கிலோ 40 கிராம் குஷ் ரக போதைப் பொருளுடன் நாட்டிற்கு வந்த இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் போதைப் பொருளை, தான் கொண்டு வந்த பொருட்களுடன் சொக்லட் பொதிகள் போல பொதி செய்து மறைத்து கடத்த முயன்றுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் சென்னையைச் சேர்ந்த 45 வயதான வியாபாரி என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளது. (ம-7)

## யாழ். இந்து - கொழும்பு இந்து இடையே விவாதச் சமர் ▪ ▪ ▪

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்துக் கல்லூரி கொழும்பு அணிகளுக்கிடையேயான சொல்லாடல் 2025 நிதர்சனத்தின் களம் விவாதப் போட்டியானது நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம் பெறவுள்ளது.

"ஈழ மணித் திருநாட்டிலே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட இடர்களிற்கு பெரிதும் காரணமாக இருப்பவர்கள் அரச ஊழியர்களைக் காட்டிலும் அரசியல்வாதிகளே" எனும் விடயத் தலைப்பை ஆதரித்தும் மறுதலித்தும் விவாதச்சமர் இடம் பெறவுள்ளது.

சமரின் நிறைவில் இந்துவின் ஆதர்சம் விருது வழங்கல் வைபவமும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## வவுனியாவில் களைகட்டியது பெரும்போக நெல் அறுவடை

(வவுனியா)

வவுனியாவில் பெரும் போக நெல் அறுவடைக்கான பணிகள் நடைபெற்று வருவதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இம்முறை வவுனியா மாவட்டத்தில் 60,831 ஏக்கரில் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்போது வரை 11,490 ஏக்கர் அளவில் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருட இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக 2547.5 ஏக்கர் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் அழிவடை ந்தமை குறிப்பிடத்தக்கது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி - II

14

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**2018 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள்**

தேர்தலின் பின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 31 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச சபையில் அதிகூடிய (13) உறுப்பினர்களைப் பெற்ற (42 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆனது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தது. தவிசாளராக கந்தையா வாமதேவன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட நெடுந்தீவு பிரதேச சபையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அதிகூடிய (6) உறுப்பினர்களைப் பெற்றிருந்தாலும் (46 சதவீதம்) 4 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆனது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுவின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தது. தவிசாளராக பிலிப்பு பற்றிக் றொஷான் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 11 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சுயேட்சைக் குழுவும் அதிகூடிய ஆசனங்களாக தலா 3 (27 சதவீதம்) ஆசனங்களைப் பெற்றிருந்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக விஜயதர்மா கேதீஸ்வரதாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்று (54 சதவீதம்) மூன்றாவது தடவையாக ஆட்சி அமைத்தது. தவிசாளராக மருதையினார் ஜெயகாந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்ற (30 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையில் அதிகூடிய (8) ஆசனங்களைப் பெற்ற (38 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக அரியரத்தினம் சாள்ஸ் அரியகுமார் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 15 உறுப்பினர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (40 சதவீதம்) 5 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக யோசேப்பு இருதயராசா பதவி ஏற்றார்.

மொத்தமாக 31 உறுப்பினர்களைக் கொண்ட வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (29 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன்ஆட்சி அமைத்தது. தவிசாளராக தங்கவேலாயுதம் ஜங்கரன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 38 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் அதிகூடிய (15) ஆசனங்களைப் பெற்ற (40 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக தியாகராஜா நிரோஷ் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 30 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (37 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக கருணாகரன் தர்ஷன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 39 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் அதிகூடிய (17) ஆசனங்களைப் பெற்ற (43 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 25 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (36 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக தருமலிங்கம் நடனேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 28 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (12) ஆசனங்களைப் பெற்ற (43 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 20 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய (8) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (40 சதவீதம்) 6 ஆசனங்களைப் பெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆட்சி அமைத்தது. தவிசாளராக நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (33 சதவீதம்) 5 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர் சிவமங்கை இராமநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

மொத்தமாக 17 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகரசபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (41 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக கோணலிங்கம் கருணானந்தராசா பதவியேற்றார்.

மொத்தமாக 45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ்ப்பாண மாநகரசபையில் அதிகூடிய (16) ஆசனங்களைப் பெற்ற (37 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. மாநகர முதல்வராக இம்மனுவல் ஆனல்ட் தெரிவு செய்யப்பட்டார். சிறிது காலத்தின் பின் அவர் பதவி இழந்தார்.

தேர்தலின் பின் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 35 உறுப்பினர்களைக் கொண்ட கரைச்சி பிரதேச சபையில் அதிகூடிய (17) ஆசனங்களைப் பெற்ற (49 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக அருணாசலம் வேழமாலிகிதன் பதவியேற்றார்.

மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்ற (46 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக சுப்பிரமணியம் சுரேன் பதவியேற்றார்.

மொத்தமாக 20 உறுப்பினர்களைக் கொண்ட பூநகரி பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (55 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக அருணாசலம் ஐயம்பிள்ளை பதவியேற்றார்.

தேர்தலின் பின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்ட மன்னார் பிரதேச சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (33 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) ஆட்சி அமைத்தது. தவிசாளராக சாகுல் கமீதுமுகம்மது முஜாஹிர் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 16 உறுப்பினர்களைக் கொண்ட முசலி பிரதேச சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) ஆட்சி அமைத்தது. தவிசாளராக அப்துல் கபூர் கலீபத் சுபீகான் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 25 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை மேற்கு பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) ஆட்சி அமைத்தது. தவிசாளராக ஆசிர்வாதம் சந்தியோகு தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 16 உறுப்பினர்களைக் கொண்ட நானாட்டான் பிரதேச சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக திருச்செல்வம் பரஞ்சோதி தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 16 உறுப்பினர்களைக் கொண்ட மன்னார் நகர சபையில் அதிகூடிய (7) ஆசனங்களைப் பெற்ற (44 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவு செய்யப்பட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 ஆயிரம்...

முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நாடு முழுவதும் உடனடியாக நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களுக்கான வெற்றிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்படும் என அமைச்சர் கூறினார். அதேநேரத்தில் 30,000 அல்லது 35,000 என நிர்ணயிக்க முடியாது இருப்பதால், பட்டதாரிகள் குழுவிலிருந்து சிலர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மேலும் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்றார்.

மேலும், அரச சேவையில் பயன்படுத்தப்படாத பட்டதாரிகள் குழுவொன்று இருப்பதாகவும் அவர்களை இணைக்கும் புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் கீழ் தேவையான ஆட்சேர்ப்புகள் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார். (ம-7)

## கடவுச்சீட்டு...

வதை உறுதி செய்வதற்காகக் கூடுதல் ஊழியர்களை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கடவுச்சீட்டுப் பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள புத்திஜீவிகள் குழுவின் விதந்துரைக்கமைய 'பி' வகைக் கடவுச்சீட்டுக்கள் 1,100,000 இனை சமகால விநியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான பெறுகை செயன்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியமர்த்தவும் பிற அரசுத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் தற்காலிகமாக கடவுச்சீட்டுக்களை வழங்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ம-7)

## எம்.பிக்களுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் கொள்கையின்படி எம்.பி.க்களுக்கு வாகன அனுமதிகள் வழங்கப்படுவதில்லை. அந்தக் கொள்கையின்படி ஒரு எம்.பி.க்கு தனது பணியை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திடமிருந்து ஒரு வாகனம் மாத்திரம் வழங்கப்பட வேண்டும்.

பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் மீள கையளிக்க வேண்டும். 05 ஆண்டுகளாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமல் உள்ளதால் வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

ஆனால் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு எம்.பி.க்களுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்போவதில்லை என்றார். (ம-7)

## பணம் செலுத்தி...

படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அவைக் குழு எடுத்த முடிவைத் தொடர்ந்து, இத்தீர்மானம் அமுல்படுத்தப்பட்டது. அதன்படி காலை உணவு 600 ரூபாய்க்கும் மதிய உணவு 1200 ரூபாய்க்கும் மாலை தேநீர் 200 ரூபாய்க்கும் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு கடந்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்தாலும், பாராளுமன்றம் நேற்று கூடிய நிலையில் நேற்று அது செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அடக்குமுறை...

கிறது. கம்புறுப்பிட்டியவில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் இடம்பெறும்போது அங்கும் அடக்குமுறை இடம்பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாட்டுக்கு எதிராக கூட்டம் நடத்த முற்பட்டபோது, நாணய நிதியத்துக்கு எதிரான கூட்டங்களை பல்கலைக்கழகத்தில் நடத்த முடியாது என பல்கலைக்கழக உபவேந்தர் கடிதம் அனுப்பி இருக்கிறார். இது ஜனநாயக விரோதச் செயற்பாடாகும்.

பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்கள், சிறப்புரிமைகள், நிலையியற் கட்டளைகள் சகலதும் மீறப்பட்டு வருகின்றன. சிறப்புரிமை பிரச்சினையொன்றிற்காக, சபாநாயகருடனும் சபை முதல்வருடனும் மற்றும் ஜனாதிபதியுடனும் சந்தித்தும் தொலைபேசி வாயிலாகவும் கலந்துரையாடினோம்.

குறித்த பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடைக்காத காரணத்தினால் தான் சபையில் இதனை எழுப்புகிறோம். நிலையியற் கட்டளைகள், சம்பிரதாயங்கள், ஒழுங்குவிதிகள் குறித்து சபாநாயகர் பேசினாலும் இந்த சம்பிரதாய ஒழுங்குகள் பின்பற்றப்படுவதில்லை. சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏர்ஸ்கின் மே மற்றும் கவுலன் ஷ்ட்லர் போன்ற விதிகள் மற்றும் மரபுகளைக் கொண்ட புத்தகங்களைப் படிக்குமாறு பரிந்துரைக்கிறேன்.

வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு முன்னால் பாராளுமன்ற நட்புறவுச்சங்க தலைமைப் பதவிக்கும் வாக்கெடுப்பு நடத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

இது பாராளுமன்ற சம்பிரதாயம் அல்ல. அதனால் முற்போக்காகச் செயற்பட வேண்டும் என்றார். (ம-7)

## அர்ச்...

தான் வெட்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் பாராளுமன்ற அடையாள அட்டை ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டதாகவும் அர்ச்சுனா எம்.பி அதனைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து மீண்டும் உரையாற்ற ஆரம்பித்த பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, தனக்கு 22ஆம் திகதியே அடையாள அட்டை வழங்கப்பட்டதாகவும் தான் 20ஆம் திகதி பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அர்ச்சுனா எம்.பி தெரிவித்தார்.

தான் அநுராதபுரத்தில் வைத்து இடைமறிக்கப்பட்ட பின்னர், தனக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடந்த உரையாடலை பொலிஸார் பதிவு செய்து அதனை ஊடகங்களில் வெளியிட்டதாகவும், பொலிஸாரின் இந்த செயல் வெட்கப்பட வேண்டியதொன்று என அவர் குறிப்பிட்டார்.

தான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் இவ்வாறு பொலிஸார் பதிவு செய்து ஊடகங்களில் வெளியிட்டதாகவும் கூறினார். இந்தப் பாராளுமன்றம் மற்றும் சபாநாயகர் உள்ளிட்டோர் இது தொடர்பில் வெட்கப்பட வேண்டும் என்றும் சபையில் மீண்டும் மீண்டும் தெரிவித்தார்.

நாட்டில் சட்டம் அனைவருக்கும் பொதுவானது, எனவே அது சாதாரண மனிதர் என்றாலும், எம்.பியாக இருந்தாலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் அவ்வாறே பின்பற்றப்படும். இதில் பாகுபாடு இல்லை என அறிவித்ததுடன், அர்ச்சுனா எம்.பி சபையில் கூறிய சில வார்த்தைகள் ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படும் என்றும் அறிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 5738
L 0 6 1 0 1 4
அத சம்பத
L 1 0 1 4
சீட்டிழுப்பு இலக்கம் 313
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1768
P 04 14 28 31 P
Double Chance 85734

மெகா பவர்
திகதி 05/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2086
I 02 45 65 74 78

ஜய
திகதி 2025.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 0006
M 2 1 8 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3980
சீட்டிழுப்பு திகதி | 05.02.2025
I 07 35 58 64
I
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.05
சீட்டிழுப்பு இலக்கம் 1047
ரிஷபம் 09 16 18 50 ரிஷபம்
71610 43

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.02.2025 வெற்றி வாரம் 446
A 3 2 9 0 9 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,531,424.80
61347
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2712
சீட்டிழுப்பு திகதி 2025.02.05 தினம் புதன்கிழமை
06 15 60 69 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,315,023.20
DLB

சனிதா
திகதி 05.02.2025 வெற்றி வாரம் 4873
46 50 69 72 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,344,588.80
ரூ.100,000/- 66403
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.02.05 வெற்றி வாரம் 2101
03 20 28 30 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,721,446.40
DLB

சீட்டிழுப்பு வாரம் 4424
சீட்டிழுப்பு திகதி 05.02.2025 தினம் புதன்கிழமை
08 21 29 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,529,631.60
118444
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 38 07 17 45 66
1888
05.02.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,291,171.40
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் 2538
சீட்டிழுப்பு திகதி 2025.02.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,972,902.40
17 25 69 73 Y
ரூ.100,000/- 702381
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2206)
076 825 7716 (ஆகாஸ்)

# விவசாயிகள், நுகர்வோரைப் பாதுகாக்க நெல்லுக்கு உத்தரவாத விலை

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

விவசாயிகள், நுகர்வோரைப் பாதுகாக்க நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் குரங்குப் பிரச்சினை பற்றிய சத்தம் அப்படித்தான் அடங்கிப் போனது என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டார்.

அவர்கள் அரிசி இல்லை என்று ஒரு கதையை உருவாக்கினர், இப்போது அதை நெல் என்று மாற்றப் போகிறார்கள் மற்றும் நெல்லுக்கு உத்தரவாத விலையை வழங்குவதற்கான தீர்மானம், விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்று ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அதன்படி, விவசாயிக்கு 120 ரூபாய் உத்தரவாத விலை வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

இதன் மூலம், மூன்று அல்லது நான்கு பேருக்குச் சொந்தமான அரிசி ஏகாதிபத்தியம் இல்லாமலாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் சட்டம் இரண்டும் முறையாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நாட்டின் மக்களின் பணத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, அதை தங்கள் சொந்தச் சொத்தாகப் பயன்படுத்தியவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

வீடு வாடகைக்கு

யாழ். பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய 5 பரப்பில் அமைந்த வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு :
077 723 2535
(C-2203)

Vacancy

Peon/ Office Boy
A/L - 3 Pass கட்டாயம்
English pass, வயதெல்லை : 22 – 30
Three Wheeler ஓடத் தெரிந்த பணியாளர் விரும்பத்தக்கது. சுயவிபரக்கோவையினை 076 422 1761 என்ற Whatsapp ற்கு அனுப்பி வைக்கவும்
Happy Supermarket - உரும்பிராய்
(3337)

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 23 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :
077 623 4204
076 755 8606
(3326)

UK & CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

Exponet Overseas consultant
No-125, Arasady Road, Jaffna.
071 415 0995
021 435 5113
(C-2205)

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்


விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-2207)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# மரண அறிவித்தல்



பிறப்பு 16 - 08 - 1944

இறப்பு 04 - 02 - 2025

## கனகசபை இரவிச்சந்திரன்

### (சாயி கிருஷ்ணா பல்பொருள் வாணிப உரிமையாளர்)

நெல்லியடி குருந்தட்டியைப் பிறப்பிடமாகவும் காளையந்தோட்டம் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இரவிச்சந்திரன் அவர்கள் 04.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - ராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் அகல்யா, காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கமலரூபன் மற்றும் சுரம்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.02.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளையந்தோட்டம்,
வதிரிச்சந்தி.

தகவல் :
குடும்பத்தினர்
072 77 48 800

(C-2197)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 14 . 06 . 1964

மறைவு 10 . 01 . 2025

கடந்த 10.01.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு.கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)

### ((SKAT கேபிள் விஷன் (கட்டப்பிராய்), வரதன் எலக்ரோனிக்ஸ் மற்றும் சரண்ஜா தொலைத் தொடர்பு நிலையம் (கஸ்தூரியார் வீதி) )

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 07.02.2025 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் மண்கும்பான் சாட்டி வெள்ளைக் கடற்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இதனையொட்டி 09.02.2025 நண்பகல் 12.30 மணியளவில் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் (நீராவியடி) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் எமைப் பிரிந்த வேளையிலே அவரது மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி மூலமும், சமூகஊடகங்கள் வாயிலாகவும் அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்தவர்களுக்கும், இறுதி நிகழ்வில் மலர்வளையம் சாத்தியவர்கள், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் மூலம் தங்கள் இரங்கலைத் தெரிவித்தவர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள், அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்தித்தவர்கள், உடனிருந்து சகல வழிகளிலும் உதவிகளை வழங்கிய, வழங்கிக் கொண்டிருக்கின்ற உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

(814)

"கைலை வாசம்"
இல. 66, [illegible] ஒழுங்கை.
யாழ்ப்பாணம்.

076 732 0241
076 260 5226

இங்ஙனம்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org